செ.வெ.எண் -10 நாள்:06.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

## ஊரக மற்றும் நகர்புற இளைஞர் / மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்

அரியலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊரக மற்றும் நகர்புறப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர் / மகளிர்களுக்கு ஜெயங்கொண்டம் நேஷனல் கலைக்கல்லூரியில் 10.02.2018 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. இதில் குறைந்தபட்ச கல்வித் தகுதியாக 8-ஆம் வகுப்பு படித்தவர் முதல் பட்டய, பட்டய, பட்டப்படிப்புகள் பயின்றவர்கள் வரை கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பினை தேர்வு செய்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர் / மகளிர் தங்களுடைய விண்ணப்பதாரர் விவர படிவம் மற்றும் சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இவ்வேலைவாய்ப்பு முகாமில், அனைத்து தொழில் நிறுவனங்களும் கலந்து கொண்டு தங்கள் தேவைக்கேற்ப இளைஞர்கள் / மகளிர்களை நேரடியாக வேலைக்கு தேர்வு செய்து கொள்ளலாம். எனவே வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள சிறு மற்றும் பெரு தொழில் நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களின் பெயரினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலக அறை எண்.215-ல் முன் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04329-228505

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.